# கள்ளக்குறிச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மக்கள் உற்சாக வரவேற்பு!









கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நேற்று (26.12.2025) நடைபெற்ற அரசு விழாவிற்கு வருகைதந்த, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சாலையின் இருபுறமும் திரண்டிருந்த பொதுமக்கள் அளித்த உற்சாக வரவேற்பு.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.12.2025) கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை சிப்காட் தொழிற்பூங்காவில், உலக அளவில் காலணிகள் உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் தைவான் நாட்டின் பௌ சென் (Pou Chen) குழுமத்தைச் சேர்ந்த ஹை க்ளோரி ஃபுட்வேர் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம் 2302 கோடி ரூபாய் முதலீட்டில் நிறுவி வரும் காலணிகள் உற்பத்தி ஆலையின் மாதிரி வடிவமைப்பினை பாவையிட்டு, 5 நபர்களுக்கு இந்நிறுவனத்தில் பணிபுரிவதற்கான பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில், அமைச்சர்கள் எ.வ. வேலு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சி.வி. கணேசன், முனைவர் டி.ஆர்.பி. ராஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஜெ.மணிக்கண்ணன், ஆர்.லட்சுமணன், அன்னியூர் சிவா, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் கௌதம் சிகாமணி, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் புஷ்பராஜ், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண்ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், பௌ சென் குழுமத்தின் துணைத் தலைவர் லியு ஜார்ஜ் ஹாங் சிஹ் (Liu George HongChih), செயல் இயக்குநர்கள் லின் வாங் சியான் (Lin Wang Chyan), ஹுவாங், வென் சிஹ் (Huang Wen Chih), TECC நிறுவன செயல் இயக்குநர் சென் யுசி (Chen Yu Chi), நைக் இந்தியா இயக்குநர்கள் சாமி வைகுண்டமணி, உதய் சிங் மேத்தா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.12.2025) கள்ளக்குறிச்சி மாவட்டம், வீரசோழபுரத்தில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் எ.வ.வேலு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சி.வி. கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தே. மலையரசன், து. ரவிக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் தா. உதயசூரியன், வசந்தம் க. கார்த்திகேயன், ஏ.ஜெ. மணிக்கண்ணன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.12.2025) கள்ளக்குறிச்சி மாவட்டம், வீரசோழபுரத்தில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் எ.வ.வேலு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சி.வி.கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தே.மலையரசன், து.ரவிக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் தா.உதயசூரியன், வசந்தம் க.கார்த்திகேயன், ஏ.ஜெ. மணிக்கண்ணன், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், மாவட்ட ஊராட்சித் தலைவர் திருமதி புவனேஸ்வரி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.12.2025) கள்ளக்குறிச்சி மாவட்டம், வீரசோழபுரத்தில் நடைபெற்ற அரசு விழாவில், மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் எ.வ.வேலு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சி.வி.கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தே.மலையரசன், து.ரவிக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் தா. உதயசூரியன், வசந்தம் க. கார்த்திகேயன், ஏ.ஜெ. மணிக்கண்ணன், மாவட்ட ஊராட்சித் தலைவர் திருமதி புவனேஸ்வரி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.